528

# தமிழ்நாட்டு விழாக்கள்

அ. மு. ப.

# தமிழ் நாட்டு விழாக்கள்

அ. மு. பரமசிவானந்தம், M. A., M. Litt.
துணைத் தமிழ்ப் பேராசிரியர்,
பச்சையப்பன் கல்லூரி,
சென்னை-30

○

தமிழ்க்கலைப் பதிப்பகம்
சென்னை-30

முதற்பதிப்பு: ஏப்பிரல் 1956

விலை ரூ. 1—4—0

உரிமைப் பதிப்பு

# முன்னுரை

உலகெங்கணும் வாழ்கின்ற மக்கள் தாம் என்றென்றும் இன்பத்தில் திளைக்க வேண்டும் என்று எண்ணுகின்றனர். அவ்வாறு எண்ணுதல் இயல்புங்கூட. ஆனால், அனைவரும் அவ்வாறு எண்ணிய இன்பத்தை எண்ணியாங்குப் பெறுதல் இயலாது. அதையும் நாம் காண்கின்றோம். என்றாலும், வாழ்வில் சில நாட்களையாவது அனைவருக்கும் இன்ப நாளாகக் காண விரும்புகின்றனர் நல்லவர்கள். 'எத்துணைத் துன்பத்தில் பட்டுழன்றாலும், வாழ்வில் சில நாளாவது அனைவரும் ஒருசேர இன்பத்தில் திளைக்கவேண்டாவா?' என்று எண்ணிற்று அவர்தம் உள்ளம். அந்த உள்ளத்தின் உணர்வே உலகில் விழாக்கள் தோன்ற வழி காட்டியாய் அமைந்தது.

விழாக்கள் நாடுதோறும் ஒவ்வொரு வகையில் நடைபெறுகின்றன. மேலை நாடுகளிலும் ஆண்டுதோறும் பல விழாக்கள் நடைபெறுவதைக் காண்கின்றோம். சமயச் சார்பு பற்றி நடைபெறும் விழாக்கள் சில. சமூகச் சார்பு பற்றி நடைபெறும் விழாக்கள் சில. பருவமும் நாளும் பற்றிக் கொண்டாடப்பெறும் நாட்கள் சில. பாரெலாம் சிறக்கவேண்டி ஆற்றும் வழிபாட்டு விழாக்களும் சில. இன்று உலகமெல்லாம் ஒருசேரக் கொண்டாடும் ஐக்கிய நாடுகள் தினவிழா முதலியன, உலகம் ஒற்றுமையாகக் கலந்து கொண்டாடப்பெறுவன. நம் பாரத நாட்டில் கொண்டாடப்பெறும் ஆகஸ்டு பதினைந்தும், ஜனவரி இருபத்தாறும்— விடுதலை விழாவும், குடியரசு விழாவும்—நம் நாட்டு மக்கள் அல்லல் அகன்று அடிமை வாழ்வு நீங்கி மகிழ்ச்சியில் சிறந்த நாட்களை நினைவூட்டும் விழாக்களாகும். டிசம்பர் 25-ஆம் நாள் கிறிஸ்தவர்தம் சமயத் தலைவரைப் பற்றிய நாள். அதைப் போன்று மகமதியமும், பௌத்தமும், சமணமும் தத்தம் சமய விழாக்களைக் கொண்டாடுகின்றன. நம் நாட்டில் நெடுங்காலமாக நிலைபெற்று வரும் சைவமும் வைணமும் அவை போன்ற விழாக்களைக் கொண்டாடி வந்துள்ளன.

தமிழ் நாட்டில் நாம் மேலே கண்ட அத்தனை வகையான விழாக்களும் நடைபெற்றன என்று அறிகின்றோம். சமயச் சார்பான விழாக்களும் உள; சமுதாயச் சார்பான

விழாக்களும் உள. பருவம் போற்றும் விழாக்களும் உள; சாதாரண வேடிக்கை விளையாட்டுக்கள் கலந்த விழாக்களும் உள. அவற்றையெல்லாம் தொகுத்துக்கூறின் அது ஒரு பெருநூலாக முடியும். வாய்ப்பு நேருமேல் பின்னால் அனைத்தையும் சேர்த்துப் பெருநூலாக வெளியிடலாம் என்ற நோக்கோடு, இன்று விழாக்கள் பற்றிய இச்சிறு நூலைத் தமிழ் மக்கள் முன் வைக்கின்றேன்.

விழாக்களின் அடிப்படைக் கொள்கை என்ன என்பதை ஒவ்வொரு விழாவைப் பற்றிய விளக்கத்திலும் குறிப்பிட்டுள்ளேன். விழா, தனி மனிதன் உடைமையன்று. பிறந்த நாள் விழாவும், நீராட்டு விழாவாகிய மண்ணு மங்கலம் போன்ற விழாக்களும், இன்னும் சிலவும் அரசருக்கே உரிய விழாக்களாகத் தமிழ் இலக்கியங்கள் எடுத்துக் காட்டினும், அவையெல்லாம் அரசன் ஒருவனாலேயே கொண்டாடப்பெறுவன அல்ல. தனி அரசன் எவ்வாறு தனக்குத் தானே விழாவினைக் கொண்டாடிக் கொள்ள முடியும்? மற்றவர் அனைவரும் சேர்ந்து 'இன்று மன்னன் பிறந்தனன். மாநிலத்தீர், வாருங்கள்,' என்று உலகத்தாரை அழைத்துச் சிறப்புச் செய்தால்தானே விழாவே சிறப்புறும்? எனவே, தனி மனிதனுக்குச் செய்யும் விழாவுங்கூட, மற்றவர் தொடர்புகளிடையே நடைபெற வேண்டியுள்ளது.

இவ்வாறான தனி மனிதர் விழாவினை விடுத்து, பொது விழாக்களை நோக்கின், அவை மக்கள் வாழ்வைத் திருத்துவனவாக அமைவதையே நாம் காண்கின்றோம். ஏதோ உண்டு, உடுத்து, உல்லாசமாகத் தனி மனிதன் வாழ்வதை எந்த விழாவும் குறிக்கவில்லை. தமிழ் நாட்டில் மட்டுமன்றி, இன்று உலக அரங்கில் நடைபெறும் அத்தனை விழாக்களும் கூடி வாழும் மனித சமுதாயத்தையேதான் அணைத்துச் செல்லுகின்றன. இத்தமிழ் நாட்டு விழாக்களிலும் அத்தகைய பண்பாடுகள் நிறைந்திருப்பதை இந்நூலில் பல்வேறு இடங்களில் விளக்கிக் காட்டியுள்ளேன்.

விழா என்பது நாட்டை வாழ்விக்க வரும் ஒரு நல்ல நாளேயாகும். நாட்டில் எத்துணை வேறுபாடுகள் இருந்தாலும் அவை விழா நாட்களில் இல்லையாக நீங்கப் பெறவேண்டும். மகப்பெறு விழாவிலே மன்னவர்கள் 'சிறைவிடுமின்; சிறைக்களமும் சீர்திருத்துமின், ஏழாண்டு தேயத்நீட்டும் இறைவிடுமின்,' என்று ஆணையிட்டு, தம்

வீட்டு விழாவை நாட்டு விழாவாக்கிய நாகரிகத்தை வரலாற்றிலே காண்கின்றோமே! தமிழ் நாட்டு விழாக்கள் அந்த வகையில் அமைந்தனவேயாகும். நாட்டில் எந்த வேறுபாடும் அன்று இருக்கக்கூடாது. சாதியாலும், சமயத்தாலும், நிதியாலும், நிறத்தாலும், வேறு எந்த வகையாலும் மக்கள் வேறுபாட்டினைக் காட்டலாகாது. அன்று பசி என்று ஒருவன் நாட்டில் பரிதவிக்கக்கூடாது. நோயாளியென்று, அன்று யாரும் மருத்துவம் நாடிச் செல்லக்கூடாது. இதுவே, விழாவின் அடிப்படை.

விழாவன்றுமட்டும் அவ்வாறு அமைந்து, மறு நாள் நாட்டு நிலை மாறினும் பயன் இல்லை. எனவே, அவ்வாறு நாடு திருந்துவதற்கேற்ற சூழ்நிலை உண்டாகவேண்டும். அதற்கேற்ற வகையில் நாட்டில் வற்றாத வளம் பெருக வேண்டும். அவ்வளம் பெருக வான் சுரக்க வேண்டும். அப்பொழுதுதான் நாடு விழாவாற்றின பலனைப் பெற்றதாகும். இக்கருத்தையெல்லாம் உட்கொண்டுதான் காவிரிப்பூம்பட்டினத்தில் விழாவினை மக்கள் அறிய முரசறைந்த வள்ளுவ முதுமகன்,

> ' பசியும் பிணியும் பகையும் நீங்கி
> வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி'

மேல் விழாவினை அறிவுறுத்தினான் என்று அறிகின்றோம். இவ்வடிகளையும் கருத்தினையும் இந்நூலில் ஆங்காங்குக் கட்டுரைதோறும் காட்டியுள்ளேன். ஆம்! அந்த விழைவு நிறைவேறினால்தான் விழாவின் அடிப்படையும் நிறைவேறும்.

தமிழ் நாட்டு விழாக்களில் பல, உழவர் கொண்டாடுவனவே. உழவர்கள்தாமே நாட்டில் பெரும்பாலாராக உள்ளனர்? இவை போன்ற உழவர் விழாக்கள் வடநாட்டிலும் கொண்டாடப்பெறுகின்றன. நிலம் செம்மைப் படுத்தும்போதும், உழவின் போதும், அறுவடையின் போதும், பூச்சிகளைப் போக்கும்போதும், வழிபாட்டைப் பெருக்க விரும்பும்போதும் அங்கு வழிபாடும் விழாவும் ஆற்றுவர் என அறிகின்றோம். மற்றும் நம்பிக்கையின் அடிப்படையிலே இங்கு மட்டுமன்றி, அங்கும் பல விழாக்கள் நடைபெறுகின்றன. ஊரில் கெட்ட காற்றுப் புக, அதை நீக்க மக்கள் ஒன்று சேர்ந்து, கையில் கொம்பு கொண்டு, தெருக்களில் பாடல்களோடு சுற்றி வருவார்

களாம். தீபாவளி விளக்கு வரிசையே கெட்டதை நீக்கும் நல் ஒளியாம். காந்தேச (Khandesh) நாட்டிலே நம் நாட்டு விழாக்கள் போன்று பல விழாக்கள் உண்டாம். எனவே, நாட்டிலும் உலகிலும் நடக்கும் விழாக்களில் ஒரு சில தமிழ் நாட்டிலும் வழக்கத்தில் உள்ளன.

தமிழ் நாட்டில் எத்தனையோ விழாக்கள் நடைபெறுகின்றன. திறப்பு விழா, கால்கோள் விழா என்று நாள்தோறும் பத்திரிகையில் காண்கின்றோம். கம்பன் விழா, வள்ளுவன் விழா என்று புலவர் விழாக்களையும் அறிவோம். இன்னும் எத்தனையோ வகைகளில் நாட்டில் விழாக்கள் நடைபெறுகின்றன. பெண்கள் விளையாடுகின்ற விளையாட்டுக்களையெல்லாம் விழாவாக்கி மணிவாசகர் தம் திருவாசகத்தில் பலப்பல பாடல்கள் பாடுகின்றார். அவைகளெல்லாம் தமிழ் நாட்டு விழாக்கள் தாம். அவ்விழாக்களுள்ளே மக்கள் பலராலும் போற்றப்படும்—நன்கு ஆற்றப்பெறும்—ஒரு சில விழாக்களைப் பற்றியே இந்நூலில் குறித்துள்ளேன். இவற்றுள் சில முன்னமே சிற்சில இதழ்களில் வெளி வந்துள்ளன. ஒரு சில புதியன.

தமிழ் நாட்டுப் பழமையைப் புத்துலகுக்குக் கொண்டுவந்து காட்ட வேண்டுமெனப் பலர் விழைகின்றனர். அவ்விழைவில் பழைமை, புதுமை நலம் பெற்றுப் பொலிய வேண்டுவது ஒன்றாகும். எனவே, அத்துறையில் நம் நாட்டுப் பழைய விழாக்கள் சிலவற்றை எடுத்து, அவை இன்றும் என்றும் கொண்டாடத் தக்கன என்பதை இந்நூலில் ஓரளவு காட்டியுள்ளேன்.

இந்நூல் வெளி வரும்போது ஒப்பு நோக்கி உதவிய அன்பர் திரு. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்களுக்குஎன் நன்றி உரியதாகுக.

சென்னை-30,
13-4-'56.

**அ. மு. பரமசிவானந்தம்**

# பொருளடக்கம்


| பொருள் | | | | பக்கம் |
|---|---|---|---|---|
| 1. | தென்றல் தவழும் சித்திரை விழா | | | 9 |
| 2. | வேனில் விழா | .... | .... | 25 |
| 3. | ஓண விழா | ... | ... | 35 |
| 4. | கலைமகள் விழா | .... | ... | 44 |
| 5. | கார்த்திகை விளக்கீடு... | | .... | 56 |
| 6. | மார்கழி நோன்பு | .... | ... | 64 |
| 7. | பொங்கல் விழா | ... | .... | 74 |
| 8. | உத்தரத் திருவிழா | .... | .... | 82 |